**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC No. 203/2017** **Date :30/03/2023**

**PW3 (ராமலிங்கம் த/பெ.பச்சைமுத்து) குறுக்கு விசாரணை தொடர்ச்சி** : சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்).**

33. **இனம் 3-ல்** காணப்படும் குறைபாடு என்பது 31/03/2001 ம் ஆண்டு ரொக்க கையிருப்பு தொகை குறைந்துள்ளதற்கானது என்றால் சரிதான். நான் இந்த குறைபாடுகள் குறித்து நான் 04/06/2003 அன்று ஆய்வு செய்ய ஆரம்பித்து 30/11/2003 அன்று முடித்தேன். நான் இருப்பு குறைபாடு இருந்தது என ஆவணங்களை வைத்துதான் கூறுகிறேனே தவிர நேரடியாக எனது கண்ணால்( physical verification) பார்க்கவில்லை என்றால் சரிதான். 31/03/2001 க்கு பின்பும் அதற்கு இடைப்பட்ட காலங்களிலும், வேறு பல ஆய்வுகளும் தணிக்கைகளும் நடைபெற்றிருக்கும் என்றால் வாய்ப்புகள் உண்டு. அவ்வாறு மேற்கொண்ட தணிக்கைகளிலோ ஆய்வுகளிலோ இந்த குறைபாடுகள் குறித்து கூறியுள்ளார்களா என்றால் ஆமாம். அதனால்தான் சிறப்பு அறிக்கை தயார் செய்யப்பட்டு என்னை விசாரணை அதிகாரியாக நியமித்தனர். இந்த அறிக்கை எப்போது தயார் செய்யப்பட்டது என்றால் 28/11/2002 மற்றும் 31/03/2003 ஆகிய தேதிகளில் சரக மேற்பார்வையாளர் இந்த ஆய்வை மேற்கொண்டு அறிக்கை வழங்கியுள்ளார். அதன் பிறகு வங்கியின் தனி அலுவலர் 11/04/2003 அன்று ஆய்வு மேற்கொண்டு அறிக்கை வழங்கியுள்ளார். அவர்களும், நேரடியாக பிசிக்கல் வெரிபிக்கேஷன் செய்தார்களா என எனக்கு தெரியவில்லை.

34. ஒவ்வொரு வங்கியிலும் ஒரு குறிப்பிட்ட தொகை ரொக்கமாக கையிருப்பு வைக்கலாம் என்றால் சரிதான். அவ்வாறு இந்த வங்கிக்கு எவ்வளவு தொகை இருப்பு வைக்கலாம் என

எனக்கு தெரியவில்லை நான் அன்றைய தினம் இருந்த இருப்பு தொகை மற்றும் செலவு செய்த தொகையாக கூறப்படும் தொகைகள் என்னென்ன செலவுக்காக செய்யப்பட்டது என நான் சரி பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதை கேஸ் புக் மற்றும் வவுச்சர் ஆகியவற்றை வைத்து சரி பார்த்தேன். அவ்வாறு சரிபார்க்கப்பட்டதாக கூறப்படும் கேஸ் புக் மற்றும் வவுச்சர்களை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் துணைப் பதிவாளர் இடம் நான் சமர்ப்பித்து உள்ளேன். அவ்வாறு நான் சரிபார்க்கப்பட்டதாக கூறப்படும் ஆவணம் என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.80 என்றால் சரிதான்.

35.அ.சா.ஆ.80 ஆவணத்தில் ஆய்வு செய்ததாக சரக மேற்பார்வையாளரோ அல்லது தனி அலுவலரோ எந்தவித சுருக்கமும் இடமில்லை என்றால் சரிதான் ஆனால் அவர்கள் Rough Chitta என்ற ஒரு ஆவணம் உண்டு அதை வைத்து சரி பார்த்திருக்கலாம். Rough Chitta ஆவணத்தை நான் சரிபார்க்கவில்லை. 31/03/2001 ல் கிட்டத்தட்ட ரூ.28,94,046/- செலவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 01/04/ 2001 அன்று ஆரம்ப இருப்பாக எவ்வளவு தொகை இருந்தது என நான் ஆவணங்களை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அவ்வாறு நான் அந்த ஆவணங்களை பார்த்ததாக எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் 01/04/ 2001 ஆம் தேதிக்கான பேரேட்டை நான் பார்த்தேன் என்பதை காண்பிக்கும் ஆவணத்தை இந்த வழக்கில் இணைக்கவில்லை என்றால் சரிதான். இந்த ஆவணத்தை எதிரியும் கதிரேசன் என்ற எழுத்தரும் பராமரித்துள்ளனர் என்றால் சரிதான். நான் கதிரேசனை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். 30/3/2001 இல் செயலாளர் என எழுதி ஒருவர் கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். அது பக்கம் 213 இல் கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த பக்கம் 213 எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எ.சா.1 ல் கண்டுள்ள செயலாளர் என்ற கையொப்பத்திற்கும் அ.சா.ஆ.80 ல் செயலாளர் என கையொப்பமிட்டுள் கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். பொதுவாக முதல் நாளின் கடைசி இருப்புத்தொகை மறு நாளின் ஆரம்ப இருப்புத்தொகையாக காண்பிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஏனென்றால் ரொக்க புத்தகத்தில் மறு நாள் கணக்கு முடிக்கப்படும் போது ஆரம்ப இருப்பு தொகையை சேர்த்து எழுதுவார்கள் அவ்வாறுதான் இந்த புத்தகத்திலும் எழுதப்பட்டுள்ளது. கூட்டுறவு துறையில் பராமரிக்கப்டும் ரொக்க புத்தகத்தில் அவ்வாறு நாங்கள் பராமரிப்பதில்லை. 30/03/2001 ம் தேதிக்கான கணக்கு வழக்கு பக்கம் 213 ல் முடிக்கப்பட்டுள்ளது என்றாலும், ஆனால் 31/03/2001 க்கான கணக்கு 215 ல் ஆரம்பிக்கப்படுள்ளது என்றாலும், இடையில் ஒரு பக்கம் ஒட்டப்பட் நிலையில் காணப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். இது சம்பந்தமாக எனது விசாரணையின்போது கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். ஆனால் தற்போது நினைவில்லை. 31/03/2001 ல் பக்கம் 215 ல் பல ரசீதுகள் கேன்சல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் எதனால் அந்த ரசீதுகள் ரத்து செய்யப்பட்டுள்ளது என எனது விசாரணையின் போது அல்லது காவல்துறையினர் விசாரணையின் போது கூறியுள்ளேன் என்றால் எனது விசாரணையின் போது நான் அது பற்றி கேட்டுள்ளேன் காவல்துறையினர் விசாரணையின் போது கூறியிருப்பேன் என நினைக்கிறேன்.

36. பக்கம் 215 முதல் 230 வரை ஒட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஒட்டப்பட்டுள்ள பக்கங்களில் என்ன எழுதப்பட்டிருந்தது என எனது விசாரணையின் போது கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் கேட்டு தெரிந்து கொண்டுருப்பேன் ஆனால் என்ன தெரிந்து கொண்டேன் என தற்போது நினைவில்லை. பொதுவாக ஒரு நாளின் கடைசி இருப்பு தொகையை கணக்கிட்டால் மட்டும் தான் மறுநாளின் ஆரம்பத் தொகையை நாம் உறுதி செய்ய முடியும் என்றால் சரிதான். அதை செயலாளர்தான் செய்வார். என்னிடம் காண்பிக்கப்படும் 03/04/2000-31/03/2001 வரையிலான இந்த ரொக்க புத்தகத்தின் பல பக்கங்களில் செயலாளர் என முத்திரையிட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கணக்கு ஆரம்பிக்கும் பக்கத்தில் செயலாளரும் எழுத்தரும் 19/10/2000 ம் வரை சேர்ந்து கையொப்பமிட்டுள்ளனர் என்றால் சரிதான். ஆனால் அதற்கு பின்பு சில பக்கங்களில் எழுத்தரும், சில பக்கங்களில் செயலாளரும், சில பக்கங்களில் இருவரும்

சேர்ந்து கையொப்பமிட்டுள்ளனர் என்றால் சரிதான். ரொக்க புத்தகத்தை எழுதுவதற்கான பொறுப்பு எழுத்தருக்கு உண்டு என்றால் அது அலுவலக உத்தரவை பொறுத்து அமையும். அலுவலக உத்தரவு இருந்தால் மட்டும்தான் இந்த புத்தகத்தில் கையொப்பமிட்டிருக்கலாம் என்றால் சரிதான். சில சமயங்களில் வாய்மொழி உத்தரவு இருந்தாலும் எழுதலாம். 31/03/2001 அன்று சில இடங்களில் அடித்தல் திருத்தல் உள்ளது என்றால் சரிதான். இந்த அடித்தல் திருத்தல் பற்றி நான் முழுமையாக ஆய்வு செய்திருந்தால் இருப்பு தொயைில் முறைகேடு ஏற்பட்டது என எனது விசாரணையில் நான் கூற வாய்ப்பிருந்திருக்காது என்றால் சரியல்ல. 31/03/2001 அன்று இனம் -3 ல் குறிப்பிட்டபடி எந்தவித இருப்பு குறைபாடும் இல்லை என்றால் சரியல்ல.

37. **இனம் எண் 4-ல்** சரவணா பிரஸ் என்பதற்கு ரூபாய் 3000 செலுத்தியதாக காணப்படுகிறது என்றால் சரிதான். அவ்வாறு பணம் செலுத்துவதற்கு வங்கியில் தீர்மானம் இயற்றப்பட வேண்டும் என்றால் சரியல்ல. ஏனென்றால் மாத கடைசியில் வரவு செலவுக்கான தொகைக்கு அங்கீகாரம் நிர்வாக குழுவால் செய்ய முடியும் அதனால் தீர்மானம் ஏற்ற வேண்டியது இல்லை. இந்தத் தொகைக்கு பின்னேற்ப்பு ஏதும் செய்யப்பட்டதா என நான் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டிருப்பேன். ஆனால் தற்போது நினைவில்லை ரூபாய் 3000/- செலுத்தியதற்கான வவுச்சரையும் தீர்மானத்தையும் நான் எனது விசாரணையில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. ஏனென்றால் நான் இந்த வவுச்சரை ஆஜர் எதிரியிடம் கேட்டபோது எழுத்தரிடம் கொடுத்ததாக கூறினார் ஆனால் எழுத்தர் அவரிடம் எந்த வகுப்பு கொடுக்கப்படவில்லை என எனது விசாரணையில் கூறியுள்ளார். மேலும் அந்த வவுச்சர் கொடுத்ததற்கான எந்தவித ஆதாரமும் இல்லை. 31/03/2001 ம் தேதிக்கான பக்கம் 236 ல் டைப்பிக் மற்றும் ஜெராக்ஸ் என மொத்தம் ரூ.248/- செலவழிக்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். அந்த தொகைக்கான வவுச்சரை நான் எனது விசாரணையின்போது பார்த்துள்ளேன். நான் அவ்வாறு எந்த வவுச்சரையும்

சரிபார்க்கவில்லை என்றாலும், நானாகவே தனி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை நான் ஆய்வு செய்யாமல் எனது அறிக்கையிலும் பிரதிபலித்துள்ளேன் என்றால் சரியல்ல. முறையாக தீர்மானம் இயற்றப்பட்டு அந்த தொகை செலவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதனால் எந்தவித நிதி இழப்பும் இந்த வங்கிக்கு ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

<u>38 இனம் என் 5-</u> ல் கண்டுள்ள குறைபாடு என்பது பயணப்படியாக டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி, மார்ச் என நான்கு மாதங்களுக்காக செலவிடப்பட்டதாக கூறப்படும் முறைகேடு என்றால் சரிதான். ஆனால் டிசம்பர் 2001 ஜனவரி, பிப்ரவரி மார்ச் 2002 ஆம் ஆண்டிற்கானது. அதே தேதியில் கதிரேசனுக்கு ஒரு முறை, அன்பழகனுக்கு இரண்டு முறை, செல்வராஜிக்கு ஒரு முறை வழங்கப்பட்டதாக அதே பக்கம் 235-ல் காணப்படுகிறது என்றால் சரிதான். பொதுவாக செயலாளருக்கு மாதம் பயணப்படியாக எவ்வளவு தொகை வழங்கப்படும் என்றால் எனக்கு அதுபற்றி நினைவில்லை. செயலாளரான எதிரிதான் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, மாவட்ட இணை பதிவாளர், சரக துணை பதிவாளர் மற்றும் ஆய்வு கூட்டங்களுக்கு வங்கியின் சார்பாக செல்வார் என்றால் சரிதான். 2001 ம் ஆண்டு நிர்வாக குழு இருந்தது என்றால் எனக்கு அதுபற்றி நினைவில்லை. பயணப்படி செலுத்துவதற்கு முன்பு அதை நிர்வாக குழு தலைவர் அல்லது நிர்வாக குழு அனுமதி வழங்கும் என்றால் சரிதான். இந்த ரூ.4000/-க்கும் இயக்குநர் குழு அனுமதி வழங்கியுள்ளது என்றாலும், அதனால் வங்கிக்கு எந்தவித இழப்பும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. ஏனென்றால் அதற்கான வவுச்சர்கள் இல்லை. இதே தொகைக்கு ஏற்கனவே பயணப்படியாக எதிரி ரூ.4000/- யை பெற்றுள்ளாரா என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் பார்க்கவில்லை. நான் முறையாக ஆவணங்களை விசாரணை செய்யாமல் வெறுமனே எதிரி முறைகேடு செய்ததாக முடிவுக்கு வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>39. இனம் எண். 6- ல்</u>** குறிப்பிடப்பட்டுள்ள Due to advance என குறிப்பிடப்பட்டுள்ளது என்னவென்றால் இந்த வங்கியில் பூங்கொடி என்பவர் விற்பணையாளராக பணியாற்றினார் என்றாலும், அவருக்கு சம்பளம் வழங்காமல் கமிஷன் அடிப்படையில் மட்டும் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதாலும், அவர் பணியில் சேர்ந்தபோது முன்பணமாக 02/11/2000 ல் ரூ.6000/-மும் 06/02/2001 ல் ரூ.12,000/-ம் ஆக மொத்தம் கமிஷன் முன் தொகையாக ரூ.18,000/- பெற்றுள்ளார் என்பதாலும், ஆனால் இவ்வளவு தொகை எனக்கு கமிஷனாக வர வாய்பில்லை என ரூ.18,000/-த்தை 31/03/2001 ல் இரசீது எண் 1013 ன் மூலம் வங்கயில் திரும்ப செலுத்தியுள்ளார் என்பதாலும், அந்த தொகையை ரொக்க புத்தகத்தில் எழுதவில்லை என்றும் காண்பித்துள்ளேன். 31/03/2001 தேதியிட்ட பக்கம் 246 ல் பூங்கொடி இரசீது எண்.1013 ல் ரூ.18,000/- என எழுதப்பட்டு வயிட்னர் இடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பக்கம் 246 **எ.சா.ஆ.**2 (ஏற்கனவே CC 196/2017 ல் ஆக குறியீடு செய்யப்படுள்ளது). ஆனால் எதிரி எனது விசாரணையின் போது அந்த பணத்தை நான் வட்டியுடன் திரும்ப செலுத்துவதாக ஒப்புக்கொண்டார். மேலும், அந்த பணத்தை எப்போது பெற்றனே் என நினைவில்லை எனவும் எனது விசாரணையின்போதும் கூறியுள்ளார். எதிரி என்னிடம் எப்போது பணத்தை பெற்றேன் என நினைவில்லை எனவும், அந்த பணத்தை திரும்ப செலுத்துகிறனே் எனவும் ஒருபோதும் கூறிவில்லை என்றால் சரியல்ல. பக்கம் 246 ல் எழுதப்பட்டு அடிக்கப்பட்டுள்ளது என்ற விபரத்தை நான் எனது விசாரணை அறிக்கையிலோ அல்லது காவல் துறையினர் வாக்குமூலத்திலோ குறியுள்ளேனா என்றால் நான் எனது அறிக்கையில் கூறவில்லை. காவல் துறையினர் விசாரணையின்போது கூறினேனா என்றால் எனக்கு நினைவில்லை. இனம் எண் 5 ல் நான் கூறியபடி எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்றாலும் நான் முறையாக

விசாரணை செய்யாமல் எதிரியின்மீது தவறான விசாரணை அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. Due to advance என்பது ஊழியர்களுக்கோ அல்லது கமிஷன் அடிப்படையில் பணிபுரியும் நபர்களுக்கோ முன்பணமாக வழங்கப்படும் தொகை என்றால் சரிதான். 31/03/2001 அன்று பூங்கொடி எந்த தொகையும் இந்த வங்கிக்கு செலுத்தவில்லை என்றால் சரியல்ல.

**<u>40. இனம் எண். 7- ல்</u>** 10/12/1998 அன்று சண்முகசுந்தரம் என்பவர் மத்திய கால கடன் எண்.123 ல் ரூ.5043/-செலுத்தியுள்ளார் என்றும், அதை எதரி கடன் பேரேட்டில் வரவு வைத்துவிட்டு ரொக்க புத்தகத்தில் வரவு வைக்காமல் முறைகேடு செய்துள்ளார் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1998 ம் ஆண்டிற்கான ஆய்வு எனக்கு வழங்கப்பட்ட ஆய்வு காலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் சிறப்பு அறிக்கையில் அது குறிப்பிடப்பட்டுள்ளது. வரவு வைத்ததாக கூறப்படும் கடன் பேரேட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரக துணைபதிவாளரிடம் அதை ஒப்படைத்துள்ளேன். நான கடன் பேரேட்டை பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. மத்திய கால கடன் என்பது 5 ஆண்டுகளுக்கு மேலாக 15 ஆண்டுகள் வரையில் கொடுக்கப்படலாம். கடன் பேரேட்டில் தவணை தொகை மற்றும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கும் என்றாலும் வரவு வைக்கப்படும்போது அதிலும், வரவு வந்ததாக குறிப்பிடுவோம் என்றால் சரிதான். நான் ஆவணங்கள் எதையும் முறையக சரிபார்க்காமல் சிறப்பு அறிக்கையின் அடிப்படையில் இந்த முறைகேட்டை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

41. இனம் எண் 8- ல் 17/11/2000 அன்று அஞ்சலம் என்பவர் மத்திய கால கடன் எண்.139 ல் ரூ.1,191/-செலுத்தியுள்ளார் என்றும், அதை எதரி கடன் பேரேட்டில் வரவு வைத்துவிட்டு ரொக்க புத்தகத்தில் வரவு வைக்காமல் முறைகேடு செய்துள்ளார் என

JWU

கூறியுள்ளேன் என்றால் சரிதான். 2000 ம் ஆண்டிற்கான ஆய்வு எனக்கு வழங்கப்பட்ட ஆய்வு காலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் சிறப்பு அறிக்கையில் அது குறிப்பிடப்பட்டுள்ளது. வரவு வைத்ததாக கூறப்படும் கடன் பேரேட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரக துணைபதிவாளரிடம் அதை ஒப்படைத்துள்ளேன். நான் கடன் பேரேட்டை பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. கடன் பேரேட்டில் தவணை தொகை மற்றும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கும் என்றாலும் வரவு வைக்கப்படும்போது அதிலும், வரவு வந்ததாக குறிப்பிடுவோம் என்றால் சரிதான். நான் ஆவணங்கள் எதையும் முறையாக சரிபார்க்காமல் சிறப்பு அறிக்கையின் அடிப்படையில் இந்த முறைகேட்டை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

42. இனம் எண் 8- ல் 29/12/1998 அன்று பத்மா என்பவர் மத்திய கால கடன் எண்.120 ல் ரூ.5410/-செலுத்தியுள்ளார் என்றும், அதை எதரி கடன் பேரேட்டில் வரவு வைத்துவிட்டு ரொக்க புத்தகத்தில் வரவு வைக்காமல் முறைகேடு செய்துள்ளார் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1998 ம் ஆண்டிற்கான ஆய்வு எனக்கு வழங்கப்பட்ட ஆய்வு காலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் சிறப்பு அறிக்கையில் அது குறிப்பிடப்பட்டுள்ளது. வரவு வைத்ததாக கூறப்படும் கடன் பேரேட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரக துணைபதிவாளரிடம் அதை ஒப்படைத்துள்ளேன். நான் கடன் பேரேட்டை பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. கடன் பேரேட்டில் தவணை தொகை மற்றும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கும் என்றாலும் வரவு வைக்கப்படும்போது அதிலும், வரவு வந்ததாக குறிப்பிடுவோம் என்றால் சரிதான். நான் ஆவணங்கள் எதையும் முறையாக சரிபார்க்காமல் சிறப்பு அறிக்கையின் அடிப்படையில் இந்த முறைகேட்டை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

43. இனம் எண் 10- ல் 31/10/2002 அன்று அறிவழகி என்பவர் கே.சி.சி கடன் எண்.127 ல் வட்டியுடன் ரூ.21236/-நிலுவைத் தொகை செலுத்த வேண்டியிருந்தும், அறிவழகி செலுத்தாமல் இருந்தபோது செலுத்தியதாக எதிரி அவருக்கு No Dues Certificate வழங்கியுள்ளார் என்றும், அதனால் வங்கிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தி முறைகேடு செய்தார் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் எதிரி வழங்கியதாக கூறப்படும் No Dues Certificate-யை கைப்பற்றினேனா என்றால் கைப்பற்றியுள்ளேன். அதை அறிவழகி என்பவரிடமிருந்துதான் கைப்பற்றினேன். அத்தகைய சான்றை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரக துணைபதிவாளரிடம் அதை ஒப்படைத்துள்ளேன். எதிரி அத்தகைய எந்த சான்றும் வழங்கவில்லை என்றால் சரியல்ல. அந்த சான்றை எதிரிதான் வழங்கினார் என நிரூபிக்க அவரது கையெழுத்தை ஒப்பிட்டு பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆனால் எதிரியே என்னிடம் வழங்கியதாக ஒப்புக்கொண்டார். எதிரி என்னிடம் அவ்வாறு ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. No Dues Certificate யை வேறு வங்கியில் கடன் பெறும்போது பொதுவாக கடன்தாரர்கள் பெறுவார்கள் என்றால் சரிதான். உண்மையிலேயே அவ்வாறு சான்று பெற்றிருந்தால் அதை வேறு வங்கியில் ஒப்படைத்திருப்பார்கள் என்றாலும், என்னிடம் திரும்ப ஒப்படைக்க வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. நான் ஆவணங்கள் எதையும் முறையாக சரிபார்க்காமல் சிறப்பு அறிக்கையின் அடிப்படையில் இந்த முறைகேட்டை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

44. இனம் எண் 11- ல் குறிப்பிடப்படுள்ள அமர்வு படியை ஒவ்வொரு இயக்குநருக்கும் எவ்வளவு வழங்கலாம் என்றால் அதை நிர்வாகம் முடிவு செய்யும்.

LAWSPARQ

ஆனால் இந்த வங்கியில் ரூ.200/- வழங்கியுள்ளனர். இந்த இனத்திற்கான முறைகேடு மொத்தம் ரூ.800/- என்றால் சரிதான். அதாவது பற்று சீட்டு/வவுச்சர் இல்லாமல் வழங்கப்பட்டதால் கூறப்பட்டுள்ளது. 16/02/2001, 15/03/2001 மற்றும் 27/03/2001 ஆகிய தேதிகளில் இயக்குநர் குழு கூடியதாக எனது விசாரணையில் உறுதி செய்தேன். அந்த தொகையை பெற்றார்களா என நான் இயக்குநரிடம் விசாரித்தேனா என எனக்கு நினைவில்லை. வவுச்சர் இல்லை என்பதால் நான் விசாரித்திருக்க வாய்ப்பில்லை. அமர்வு படி முறையாக வழங்கப்பட்டுள்ளது என்றாலும், முறைகேடு வாய்பில்லை என்றாலும் சரியல்ல. இதே இனத்தில் ரூ.300/- பயணப்படியாக எதிரி எடுத்துக்கொண்டார் என தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆவணங்கள் எதையும் முறையாக சரிபார்க்காமல் சிறப்பு அறிக்கையின் அடிப்படையில் இந்த முறைகேட்டை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

45. இனம் எண் 12- ல் குறிப்பிடப்பட்டுள்ள இதே வங்கியில் பணிபுரிந்த கதிரேசன் என்வருக்கு வழங்கப்பட்ட வாகன கடன் மற்றும் நுகர்பொருள் கடன் சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். வங்கி ஊழியருக்க கடன் வழங்கப்படும்போது இயக்குநர் குழு அல்லது தனி அலுவலர் தீர்மானம் இயற்ற வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு தீர்மானம் இயற்றிய பிறகு அவரது சம்பளத்தில் மாதாந்திர தவணையை பிடித்தம் செய்ய அந்த ஊழியர் சம்பதம் தெரிவித்து கடிதம் வழங்க வேண்டும் என்றால் சரிதான். ஆனால் பொதுவாக விண்ணப்பத்திலேயே அந்த சம்பந்தம் தெரிவிக்கப்படும் என்றும், ஆனால் அப்படி ஒரு விண்ணபத்தை இந்த ஊழியர் வழங்கவில்லை என்றும் சாட்சி கூறுகிறார். இந்த ஊழியருக்கு முறையாக கடன் வழங்கப்பட்டு அந்த கடனுக்கான தவணை தொகை இந்த ஊழியரின் மாத சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்டது என்ற விபரத்தை தெரிந்து

கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் வழங்கிய விசாரணை அறிக்கையின் அடிப்படையில் துணை பதிவாளர் எதிரியின் மீது தண்ட நடவடிக்கை மேற்கொண்டார் என்றால் சரிதான். அந்த நடவடிக்கையில் நான் இனம் 12 ல் குறிப்பிடப்பட்டுள்ள முறைகேடு நடைபெறவில்லை என கைவிடப்பட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. இனம் 12- ல் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்றாலும், கதிரேசன் என்ற ஊழியர் எதிரியின் மீது உள்ள விரோதத்தால் இவ்வாறு புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் ஆவணங்கள் எதையும் முறையாக சரிபார்க்காமல் சிறப்பு அறிக்கையின் அடிப்படையில் இந்த முறைகேட்டை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

46. இனம் எண் 13- ல் குறிப்பிடப்பட்டுள்ள இதே வங்கியில் பணிபுரிந்த செல்வராஜ் என்வருக்கு வழங்கப்பட்ட வாகன கடன் மற்றும் நுகர்பொருள் கடன் சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். வங்கி ஊழியருக்கு கடன் வழங்கப்படும்போது இயக்குநர் குழு அல்லது தனி அலுவலர் தீர்மானம் இயற்ற வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு தீர்மானம் இயற்றிய பிறகு அவரது சம்பளத்தில் மாதாந்திர தவணையை பிடித்தம் செய்ய அந்த ஊழியர் சம்பதம் தெரிவித்து கடிதம் வழங்க வேண்டும் என்றால் சரிதான். ஆனால் பொதுவாக விண்ணப்பத்திலேயே அந்த சம்பந்தம் தெரிவிக்கப்படும் என்றும், ஆனால் அப்படி ஒரு விண்ணப்பத்தை இந்த ஊழியர் வழங்கவில்லை என்றும் சாட்சி கூறுகிறார். இந்த ஊழியருக்கு முறையாக கடன் வழங்கப்பட்டு அந்த கடனுக்கான தவணை தொகை இந்த ஊழியரின் மாத சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்டது என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் வழங்கிய விசாரணை அறிக்கையின் அடிப்படையில் துணை பதிவாளர் எதிரியின் மீது தண்ட நடவடிக்கை மேற்கொண்டார் என்றால் சரிதான். அந்த நடவடிக்கையில் நான் இனம் 13 ல் குறிப்பிடப்பட்டுள்ள முறைகேடு நடைபெறவில்லை என கைவிடப்பட்டது என்றால் எனக்கு அதுபற்றி

தெரியாது. இனம் 13- ல் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்றாலும், செல்வராஜ் என்ற ஊழியர் எதிரியின் மீது உள்ள விரோதத்தால் இவ்வாறு புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் ஆவணங்கள் எதையும் முறையாக சரிபார்க்காமல் சிறப்பு அறிக்கையின் அடிப்படையில் இந்த முறைகேட்டை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

47. இனம் எண் 14- ல் குறிப்பிடப்பட்டுள்ள பேரவை கூட்டம் 25/05/2001 ல் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த பேரவை கூட்டத்தில் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்றால் சரிதான். பேரவை கூட்டத்திற்கென டீ, காபி, ஸ்நாக்ஸ் வழங்குவதற்காக ஒரு தொகை செலவிடப்படும் என்றால் சரிதான். அ.சா.ஆ.89 ல் பக்கம் 25 ல் ஸ்வீட்பில்படி ரூ.3500/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் பற்று சீட்டு இல்லாமல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பக்கம் 25 ல் செயலாளர் மற்றும் எழுத்தர் கையொப்பமிட்டுள்ளனர் என்றால் சரிதான். இந்த பேரவை கூட்டத்திற்கான செலவுகளை நிர்வாக குழு அங்கீகாரம் வழங்கும் என்றால் சரிதான். அவ்வாறு வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கான நகலை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். ஏனென்றால் அந்த சமயத்தில் இல்லை. இது சம்பந்தமாக நான் கதிரேசனை விசாரித்துள்ளேன். பில் இல்லாமல் கதிரேசன் கையொப்பம் போட வாய்ப்பில்லை என்றால் சரிதான். இந்த இனத்திலும் எந்தவித முறைகேடும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. ஏனென்றால் ரொக்க பணத்திற்கு எதிரிதான் பொறுப்பாவார். நான் ஆவணங்கள் எதையும் முறையாக சரிபார்க்காமல் சிறப்பு அறிக்கையின் அடிப்படையில் இந்த முறைகேட்டை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

48. இனம் எண் 15- ல் குறிப்பிடப்பட்டுள்ள பச்சமுத்து என்பவர் அவரது பெயரில் ரூ.15000/- யை 07/01/2001 அன்ற நிரந்தர வைப்பேடு செய்து வைத்திருந்தார். 08/08/2002 அன்று அவர் இறந்துவிட்டார். அவரது பெயரில் எங்களது வங்கியில் நிலுவையில் இருந்த கே.சி.சி கடன் தொகையை நிரந்தர வைப்பீடு தொகையை ஈடு செய்துகொள்ளும்படி அவரது வாரிசுகள் எங்களுக்கு ஒப்புதல் கடிதம் வழங்கியுள்ளார்களா என்றால் வழங்கியுள்ளார்கள். அந்த கடிதத்தை நான் எனது விசாரணையின்போது கைப்பற்றினேனா என்றால் கைப்பற்றியுள்ளேன். 28/12/2002 அன்று நிரந்தர வைப்பீட்டு தொகையை வட்டியுளட் ரூ.16023/- யை பச்சமுத்துவின் வாரிசுதாரர்கள் திரும்ப பெற்றுக் கொண்டதாக ரொக்க புத்தகம் பக்கம் 114 ல் குறிப்பு உள்ளது என்றால் சரிதான். அவர்கள் இந்த தொகையை திரும்ப பெறவில்லை என கூறுவதற்கு அவர்கள் வாய்மொழியாக கூறும் வாக்குமூலத்தை தவிர வேற எந்த ஆவணங்களும் இல்லை என்றால் சரியல்ல. பொதுவாக நிரந்தர வைப்பீடு இரசீது இல்லாத பட்சத்தில் அதற்காக உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அந்த தொகையை பெற்றுகொள்ளலாம் என்றால் சரிதான். இறந்து போன பச்சமுத்து நிரந்தர வைப்பீட்டு இரசீதை எங்கு வைத்தார் என தெரியாததால் அவரது வாரிசுகள் முறைப்படி ஆவணங்களை ஒப்படைத்து திரும்ப பெற்றுள்ளனர் என்றால் சரியல்ல. நான் பச்சமுத்துவின் வாரிசு தார்களிடமிருந்து அசல் ஆவணங்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. ஏனென்றால் நான் நிரந்தர வைப்பீட்டு இரசீதை கைப்பற்றி சரக துணை பதிவாளரிடம் ஒப்படைத்தேன். நான் அவ்வாறு எந்த இரசீதையும் கைப்பற்றவில்லை என்றாலும், அதனால்தான் அத்தகைய இரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் ஆவணங்கள் எதையும் முறையாக சரிபார்க்காமல் சிறப்பு அறிக்கையின் அடிப்படையில் இந்த முறைகேட்டை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

49. இனம் எண் 16- ல் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து எடுத்துவரும் பணம் குறித்த விபரத்தை தனி பதிவேடுகளில் பராமரிப்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறான பதிவேடு எதையும் நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை. ஏனென்றால் ரொக்க புத்தகத்தில் எதிரி அதை வரவு வைத்துள்ளார். 14/12/2002 அன்று எதிரி அந்த வங்கியிலிருந்து எடுத்ததாக கூறப்படும் தேதியின் காசோலை பேரேட்டை நான் ஆய்வு செய்திருந்தால் உண்மையிலேயே அந்த தேதியில்தான் பணம் எடுக்கப்பட்டதா என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரிதான். அந்த தேதியில் எதிரியிடம் பணம் வழங்கப்பட்டதா என மத்திய கூட்டுறவு வங்கியின் கணக்குகளை பார்த்து தெரிந்து கொண்டேன். நான் மத்திய கூட்டுறவு வங்கியின் கணக்கு வழக்கை சரிபார்த்தேன் என்றோ அல்லது அந்த வங்கியினரை விசாரித்தேன் என்றோ, எந்தவித குறிப்பும் எனது விசாரணை அறிக்கையில் இடம்பெறவில்லை என்றால் சரிதான். இந்த இனத்தில் குறிப்பிட்டபடி எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை என்றாலும், நான் ஆவணங்கள் எதையும் முறையாக சரிபார்க்காமல் சிறப்பு அறிக்கையின் அடிப்படையில் இந்த முறைகேட்டை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

50. இனம் எண் 17- ல் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து எடுத்துவரும் பணம் குறித்த விபரத்தை தனி பதிவேடுகளில் பராமரிப்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறான பதிவேடு எதையும் நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை. ஏனென்றால் ரொக்க புத்தகத்தில் எதிரி அதை வரவு வைத்துள்ளார். 30/01/2003 அன்று எதிரி அந்த வங்கியிலிருந்து எடுத்ததாக கூறப்படும் தேதியின் காசோலை பேரேட்டை நான் ஆய்வு செய்திருந்தால் உண்மையிலேயே அந்த தேதியில்தான் பணம் எடுக்கப்பட்டதா என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரிதான்.

அந்த தேதியில் எதிரியிடம் பணம் வழங்கப்பட்டதா என மத்திய கூட்டுறவு வங்கியின் கணக்குகளை பார்த்து தெரிந்து கொண்டேன். நான் மத்திய கூட்டுறவு வங்கியின் கணக்கு வழக்கை சரிபார்த்தேன் என்றோ அல்லது அந்த வங்கியினரை விசாரித்தேன் என்றோ, எந்தவித குறிப்பும் எனது விசாரணை அறிக்கையில் இடம்பெறவில்லை என்றால் சரிதான். இந்த இனத்தில் குறிப்பிட்டபடி எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை என்றாலும், நான் ஆவணங்கள் எதையும் முறையாக சரிபார்க்காமல் சிறப்பு அறிக்கையின் அடிப்படையில் இந்த முறைகேட்டை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

51. இனம் எண் 18- ல் குறிப்பிடப்பட்டுள்ள நாச்சியப்பன் என்பவர் வழங்கியதாக கூறப்படும் அசல் காசோலை எண் 17141 என்பது எங்களது வங்கியில் இல்லை என்றால் காசோலை எண் 17141 என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையான காசோலை எண் 17143. அந்த காசோலையின் அசல் இந்த வங்கியில் இல்லை என்றால் சரிதான். சாட்சி தானாக அந்த காசோலை வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்டு மத்திய கூட்டுறவு வங்கிக்கு வசூலுக்காக அனுப்பப்பட்டு வசூல் ஆகாமலேயே வசூல் ஆனதாக முன்னரே எதிரி நாச்சியப்பனுக்கு பணம் வழங்கியுள்ளார் என கூறியுள்ளார். மீண்டும் வசூல் ஆன பிறகு பணத்தை வழங்கியதாக எழுதியுள்ளார். கையிருப்பு தொகையில் இரண்டு முறை கொடுக்கப்பட்டதாக குறைபாடு ஏதேனும் உள்ளதா என்றால் உண்டு. ஏனென்றால் வவுச்சர் இல்லை. வவுச்சர் இல்லை என்பதால் இருப்பு தொயையில் குறைபாடு உள்ளது என கூறுகிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக காசோலை மூலம் நிதி பெறுதல் சம்பந்தமாக பதிவேடுகள் பராமரிக்கப்படும் என்றால் சரிதான். அவ்வாறான பதிவேட்டை கைப்பற்றி எந்த தேதியில் அந்த காசோலை வசூலுக்காக அனுப்பப்பட்டது என நான் தெரிந்து கொண்டேனா என்றால் நினைவில்லை. அவ்வாறான பதிவேட்டை நான்

கைப்பற்றினோனா என்றால் நான் கைப்பற்றி சரக துணைப்பதிவாளரிடம் ஒப்படைத்துள்ளேன். நான் அவ்வாறான எந்த ஆவணத்தையும் கைப்பற்றவில்லை என்றாலும், அதனால்தான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த இனத்தில் குறிப்பிட்டபடி எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை என்றாலும், நான் ஆவணங்கள் எதையும் முறையாக சரிபார்க்காமல் சிறப்பு அறிக்கையின் அடிப்படையில் இந்த முறைகேட்டை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

52. செயலாளருடன் கூட்டு பொறுப்புடன் கையொப்பமிட்ட எழுத்தர் கதிரேசன் என்பவர் மீது நான் எந்தவித குற்றச்சாட்டும் எனது விசாரணை அறிக்கையில் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் முறையாக விசாரணை செய்யாமல் எதிரியின் மீது மட்டும் குற்றமட் சுமத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எங்களது சரக மேற்பார்வையாளர் மற்றும் தனி அலுவலர் ஆகியோர்களை காப்பற்றுவதற்காக எதிரியின் மீது மட்டும் குற்றம் சுமத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய அறிக்கையை முறையாக விசாரணை செய்து தயாரிக்காமல் எங்கள் அலுவலத்தில் வைத்தே தனி அறிக்கை மற்றும் சிறப்பு அறிக்கையின் அடிப்படையில் தயார் செய்துள்ளேன் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

Digital